## கொழும்புப் பல்கலைக்கழகம்

### கல்விப் பீடம்

### கல்விமாணிப் பரீட்சை – பகுதி III

### முதலாம் பருவம் – 2017/2018

### SPM 406 – 2 விசேட கற்பித்தல் முறைகள்

**நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

- **நீங்கள் கற்ற இரண்டு பாடங்களைத் தெரிவுசெய்க.**
- **ஒவ்வொரு பாடத்திலுமுள்ள முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்குமாக எல்லாமாக ஆறு (06) வினாக்களுக்கு விடைதருக.**
- **விடைத்தாள்களை வேறுவேறாகக் கட்டி மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.**
- **விடைத்தாளின் வலதுபக்கமேல் மூலையில் பாடத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுக.**

---

### தமிழ்மொழி கற்பித்தல் முறைகள்

1.

i. அடிப்படை மொழித் திறன்கள் நான்கும் எவை?

ii. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் 4 தருக.

iii. மொழியின் இயல்புகள் (தொழிற்பாடுகள்) 4 தருக.

iv. பிள்ளையின் மொழி விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தருக.

v. பேச்சு முன்பயிற்சிச் செயற்பாடுகள் இரண்டினையும் விளக்குக.

(5 x4 = 20புள்ளிகள்)

2.

i. மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்களைச் சுரக்கமாக விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. தமிழ்மொழியைக் கற்பித்தலின் பொது நோக்கங்கள் நான்கினை விளக்குக.

(8 புள்ளிகள்)

3.

i. இடைநிலை வகுப்புக்களில் இலக்கணம் கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. இலக்கணம் கற்பிப்பதற்குக் கையாளப்படும் இரண்டு சிறப்பான முறைகளையும் குறிப்பிட்டு அவற்றை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

(8 புள்ளிகள்)

4.

i. உரைநடை ஆக்கங்களைப் பட்டியற்படுத்துக.

(7 புள்ளிகள்)

ii. உரைநடை கற்பிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் நான்கினை விளக்குக.

(8 புள்ளிகள்)

5.

i. வாசிப்பு முன்செயற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. வாசிப்பின் வகைகளைக் கூறி அவற்றினை விளக்குக.

(8 புள்ளிகள்)

6.

i. செய்யுள் ஒன்றை வாசித்தல் (படித்தல்) தொடர்பாக கற்பிக்கும்போது ஆசிரியர் கவனிக்கவேண்டிய விடயங்கள் எவை?

(7 புள்ளிகள்)

ii. செய்யுளை அல்லது கவிதையை நயத்தல் தொடர்பாக ஆசிரியர் ஒருவர் மாணவர்களுடன் கலந்துரையாட வேண்டிய விடயங்களை விளக்குக.

(8 புள்ளிகள்)

## புவியியல் கற்பித்தல் முறைகள்

1.

i. இலங்கையில் புவியியல் பாடத்தைக் கற்பிப்பதன் மூலம் அடையப்படக்கூடிய நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ii. தேசப்படங்களைக் கற்பிக்கும் போது புவியியல் ஆசிரியர் ஒருவர் கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கியமான விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

iii. புவியியல் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய பிரதான பண்புகள் மூன்றைத் தருக.

iv. புவியியல் பாடத்தில் ஒருங்கிணைப்பு என்பதனை விளக்குக.

v. புவியியலை ஒரு பாடமாக எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதனைச் சுரக்கமாக விளக்குக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

2.

i. புவியியல் பாட அலகொன்றைத் தெரிவு செய்து அதனை களப்பயணத்தின் மூலம் எவ்வாறு கற்பிக்கலாம் என்பதனை அதன் படிமுறைகளைத் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. களப்பயணத்தின் நன்மைகளையும் பலவீனங்களையும் தருக.

(5 புள்ளிகள்)

3.

i. நீங்கள் விரும்பிய புவியல் பாடத் தலைப்பொன்றைத் தெரிவு செய்து செயற்றிட்டமுறையில் அதனை எவ்வாறு கற்பிக்க முடியும் என்பததை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ii. புவியியல் பாட அலகொன்றுக்கான செயற்றிட்ட தலைப்பைத் தெரிவு செய்வதில் கவனத்திற் கொள்ளவேண்டிய காரணிகளை விளக்குக.

(5புள்ளிகள்)

4.

i. புவியியல் பாடம் கற்பிக்கும் ஓர் ஆசிரியருக்கு புவியியல் ஆய்வுகூடமொன்று ஏன் அவசியம் என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. உங்களதுபாடசாலைக்கு தனியான புவியியல் ஆய்வுகூடமொன்றுக்கான மாதிரியை வடிவமைக்குக.

(05புள்ளிகள்)

5. கீழ்வருவனவற்றுள் ஏதாவது மூன்றிற்கு சுரக்கமான குறிப்பு எழுதுக.

i). ஐக்கிய இராச்சியத்தில் புவியியல் கற்பித்தலின் நோக்கங்கள் நான்கினை விபரிக்குக.

ii). முதன்முதலாக புவியியலைக் கற்பவருக்கு தேசப்படத்தை எவ்வாறு கற்பிக்கலாம் என்பதனை விளக்குக.

iii). புவியியல் கற்பித்தலுக்கு சேகரிக்கப்பட்ட பொருட்கள்(collected items) மற்றும் மாதிரிகள் என்பவற்றின் உபயோகம்

iv). புவியியல் கற்பித்தலுக்காக வெண்பலகையை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை உதாரணத்துடன் விளக்குக.

v). ஏனைய ஆசிரியர்களைவிட் புவியியல் பாட ஆசிரியர் எதிர்நோக்குகின்ற சவால்களை விளக்குக.

(3 x 5 = 15 புள்ளிகள்)

## வரலாறு கற்பித்தல் முறைகள்

1.

i. வரலாறு என்றால் என்ன என்பதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க இரண்டு வரைவிலக்கணங்களைக் தருக.

ii. வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை மூதாதாரங்களைப் பட்டியலிடுக.

iii. வரலாறு ஒரு விஞ்ஞானமாகுமா? என்பதனைச் சுருக்கமாக விமர்சிக்குக.

iv. இடைநிலைப் பாடசாலைகளில் வரலாறு கற்பித்தலின் நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

v. வரலாற்றுப் பாட ஆசிரியர் ஒருவர் வளர்த்துக் கொள்ளவேண்டிய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

2.

i. கீழைத்தேய வரலாறானது சமூகம் மற்றும் சமயம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளது என்பதனை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுக.

(09 புள்ளிகள்)

ii. வரலாற்றைக் அறிந்து கொள்ள உதவும் மூலாதாரங்களைத் தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய மூன்று விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

3.

i. கதைகூறல் நுட்பத்தினை வெவ்வேறு வயது மட்டங்களிலுள்ள பிள்ளைகளுக்கு ஏற்ப எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. பாத்திரமேற்று நடித்தல் முறையினை வரலாற்றுப் பாட ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை விளக்குக.

(07 புள்ளிகள்)

4.

i. குறித்த வகுப்பொன்றுக்கான 40 நிமிடப் பாட வேளைக்குரிய வரலாற்றுப் பாடத்தின் அலகொன்றைத் தெரிவு செய்து அதற்கான பாடக் குறிப்பொன்றை எழுதுக.

(10 புள்ளிகள்)

ii. வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கு பாடந் திட்டமிடல் ஏன் அவசியம் என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுள் ஏதாவது மூன்றிற்கு சுரக்கமான குறிப்புரை எழுதுக.

i). வரலாறு கற்பித்தலில் எதிர்நோக்கப்படும் சவால்கள்

ii). வரலாறு கற்பித்தலை மேம்படுத்துவதில் துணைச்சாதனங்களின் பயன்பாடு

iii). வரலாறு கற்பித்தலில் நூதன சாலைகளின் முக்கியத்துவம்

iv). வுரலாற்றுப் பாடம் கற்பித்தலில் கம்பீர வகுப்பறை (Smart Classroom)

v). இன சக வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு வரலாற்றுப் பாட கற்பித்தலின் முக்கியத்துவம்

(5 x 3 = 15 புள்ளிகள்)

****************